

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 14. திருவுந்தியார்

(தில்லையில் அருளியது)

ஞான வெற்றி

(கலித்தாழிசை)



# திருச்சிற்றம்பலம்



வளைந்தது வில்லு விளைந்தது பூசல்

உளைந்தன முப்புரம் உந்தீபற

ஒருங்குடன் வெந்தவாறு உந்தீபற

1



ஈர்அம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில்

ஓர்அம்பே முப்புரம் உந்தீபற

ஒன்றும் பெருமிகை உந்தீபற







தச்சு விடுத்தலும் தாம்அடி யிட்டலும்

அச்சு முறிந்தது என்று உந்தீபற

அழிந்தன முப்புரம் உந்தீபற





உய்ய வல்லார்ஒரு மூவரைக் காவல்கொண்டு

எய்ய வல்லானுக்கே உந்தீபற

இளமுலை பங்கள்என்று உந்தீபற





சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்

ஓடிய வாபாடி உந்தீபற

உருத்திர நாதனுக்கு உந்தீபற.





ஆஆ திருமால் அவிப்பாகங் கொண்டன்று

சாவாது இருந்தான்என்று உந்தீபற

சதுர்முகன் தாதைஎன்று உந்தீபற





வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய

கையைத் தறித்தான்என்று உந்தீபற

கலங்கிற்று வேள்விஎன்று உந்தீபற.





பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்களைப்

பார்ப்பது என்னேஏடி உந்தீபற

பணைமுலை பாகனுக்கு உந்தீபற





புரந்தரனார் ஒரு பூங்குயில் ஆகி

மரந்தனில் ஏறினார் உந்தீபற

வானவர் கோன்என்றே உந்தீபற





வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை

துஞ்சினவா பாடி உந்தீபற

தொடர்ந்த பிறப்புஅற உந்தீபற.





ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்

கூட்டியவா பாடி உந்தீபற

கொங்கை குலுங்கநின்று உந்தீபற.





உண்ணப் புகுந்த பகன்ஒளித்து ஓடாமே

கண்ணைப் பறித்தவாறு உந்தீபற

கருக்கெட நாம்எலாம் உந்தீபற





நாமகள் நாசி சிரம் பிரமன்படச்

சோமன் முகம்நெரித்து உந்தீபற

தொல்லை வினைகெட உந்தீபற





நான்மறை யோனும் மகத்துஇயமான்படப்

போம்வழி தேடுமாறு உந்தீபற

புரந்தரன் வேள்வியில் உந்தீபற





சூரியனார் தொண்டை வாயினில் பற்களை

வாரி நெரித்தவாறு உந்தீபற

மயங்கிற்று வேள்விஎன்று உந்தீபற





தக்கனார் அன்றே தலைஇழந்தார் தக்கன்

மக்களைச் சூழநின்று உந்தீபற

மடிந்தது வேள்விஎன்று உந்தீபற





பாலகனார்க்கு அன்று பாற்கடல் ஈந்திட்ட

கோலச் சடையற்கே உந்தீபற

குமரன்தன் தாதைக்கே உந்தீபற





நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை

ஒல்லை அரிந்ததுஎன்று உந்தீபற

உகிரால் அரிந்ததுஎன்று உந்தீபற





தேரை நிறுத்தி மலைஎடுத்தான் சிரம்

ஈரைந்தும் இற்றவாறு உந்தீபற

இருபதும் இற்றதுஎன்று உந்தீபற





ஏகாசம்இட்ட இருடிகள் போகாமல்

ஆகாசம் காவல்என்று உந்தீபற

அதற்கு அப்பாலும் காவல்என்று உந்தீபற



ஸ்ரீ மாணிக்கவாசகர்